பாடம் - 39

# தேவனுடைய தெய்வீகத் திட்டம்

# கர்த்தரின் இரண்டாம் வருகை பாகம் - 1




# OUR LORD'S 2ND PRESENCE PART - 1

For Further Details : Email us : baskar_harvest@yahoo.co.in, baskarharvest@gmail.com
Phone : 97886 19229, 93641 50005

# தேவனுடைய தெய்வீகத்திட்டம்

## இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை - பாகம் - 1

## எதிர்பார்ப்புகளும், எடுத்துக்கொள்ளப்படுதலைக் குறித்த கருத்துக்களும்




கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இன்று நாம் நம் ஆண்டவர் இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து மூன்று படிகளில் காணலாம்.

நாம் இப்பாடத்தின் ஆரம்பமாக 2ம் வருகையின் வாக்குத்தத்தத்தைக் குறித்த வசனத்தை வாசிப்போம்

**யோவான் 14:3**

***"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்"***

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் உபதேசமானது பின்வரும் வார்த்தையின் மூலம் குறிக்கப்படுகிறது.

### எடுத்துக்கொள்ளப்படுதல்(RAPTURE)

இந்த எடுத்துக்கொள்ளப்படுதல் என்பதற்கான ரேப்ச்சர் என்ற ஆங்கில வார்த்தையைப் பற்றியோ அதன் உபதேசத்தைப் பற்றியோ கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அதாவது எடுத்துக்கொள்ளப்படுதலைக்(RAPTURE) குறித்த உபதேசம் சொல்வது என்னவென்றால், இயேசு தம்முடைய இரண்டாம் வருகையில் வரும்போது, கிறிஸ்துவுக்குள் மரித்த கிறிஸ்தவர்களும், உயிரோடிருக்கும் கிறிஸ்தவர்களும், மரித்தவர் தங்கள் கல்லறையிலிருந்தும் உயிரோடிருப்பவர்கள் மாற்றப்பட்டும், புவிஈர்ப்பு விசைக்கு எதிர்த்து, மேகங்களில் இயேசுவோடு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆகாயத்தில் கர்த்தருடன் சேர்வார்கள் என்று நம்பப்படுகிறது.

மேலும் இவை, விசுவாசிகள் இரத்தத்தோடும், மாம்சத்தில் இருக்கும்போதே இவை நடக்கும் என்றும், இப்படி எடுத்துக்கொள்ளப்படுபவர்கள் இயேசுவோடு இருந்து பேசுவார்கள் என்றும் பேசப்படுகிறது. இவையெல்லாம் உண்மையாக இருந்தால் , என்ன மாதிரியான குழப்பங்கள் ஒரு நொடியில் ஏற்படும்?

☞ ஒரு கிறிஸ்தவன், விமான ஓட்டுனராக இருந்தால், ஒரு நொடிப்பொழுதில் விமானத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டால்( மறைந்துவிட்டால்) அதில் பயணம் செய்யும்

பயணிகளின் நிலை என்னவாகும்?




☞ அப்படியே பஸ் மற்றும் கார்களிலுள்ள ஓட்டுநர்கள், பயணிகளை விட்டுவிட்டு, ஓடும் வாகத்திலிருந்து மாயமாக மறைந்தால் எப்படியிருக்கும்?

☞ அதேபோல், பாடம் நடத்தும் ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு மறைந்தால் எப்படியிருக்கும்?

☞ அலுவலகங்களில் வேலைசெய்யும் ஊழியர்களுக்கு இப்படி நடந்தால் என்னவாகும்?

☞ மேலும் புதிதாக திருமணமான தம்பதிகள் இருவரில் ஒருவர் மறைந்தால் எப்படியிருக்கும்?

⇨ இப்படிப்பட்ட காரியங்களை கற்பனை செய்ய முடிகிறதா?

⇨ இந்த உபதேசத்தை அநேக கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். இப்படிநடக்கும் என்பதாக திரைப்படக் காட்சிகளிலும் காட்டுகிறார்கள்.

இதைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம். இந்த போதனைக்கு ஏற்றாற்போல் உள்ள சில வசனங்களைக் காணலாம் -

**1தெசலோனிக்கேயர் 4:16,17**

*"ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்"*

இந்த வார்த்தைகள் தான் இந்த போதனைக்கு வித்திட்டது.

அதோடுகூட

**லூக்கா 17:34-37**

*"அந்த இராத்திரியில் ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான். திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள். வயலிலிருக்கிற இரண்டுபேரில் ஒருவன் எற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக, எங்கே ஆண்டவரே என்றார்கள். அதற்கு அவர், பிணம் எங்கேயோ*

*அங்கே கழுகுகள் வந்து கூடும் என்றார்"*

இவ்வார்த்தை மேற்கண்ட எடுத்துக்கொள்ளப்படுதல்(Rapture) போதனைக்கு உறுதி தருவதாக உள்ளது. மேலும்

### *1கொரிந்தியர் 15:51,52*

***"இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் போது , ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும். அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்"***

இவ்வசனமும் எடுத்துக்கொள்ளப்படுதலை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இந்த உபதேசத்திற்கு இன்னும் ஆதார வசனங்கள் அநேகம் உள்ளன. அவையெல்லாம் நேரடியாக எடுத்துக்கொண்டால் மட்டுமே அப்படித்தோன்றும் ஆனால் இவ்வசனங்களை நிதானமாக படித்துப்பார்த்து அதில் பயன்படுத்தப்பட்டுள்ள பாஷையை கூர்ந்து கவனிக்கும்போது, அதன் சரியான அர்த்தம் விளங்கும்.

### *1தெசலோனிக்கேயர் 4:16,17*

***"ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்"***

இங்கு பவுல் , உயிரோடு இருக்கும் நாமும் என்று கூறுவதன்மூலம் எழும் கேள்வி என்னவெனில், முதலாம் நூற்றாண்டில் இருந்த பவுல் காலத்து விசுவாசிகள்(கிபி 60 களில் வாழ்ந்த), இயேசுவின் இரண்டாம் வருகைவரை கிட்டத்தட்ட 2000 வருடங்களுக்குப் பிறகு உயிரோடு இருக்கமுடியுமா?

பவுல் இங்கு நேரடியான பாஷையில் பேசவில்லை. ஏனென்றால் அது நம்பமுடியாததாயுள்ளது. இப்படியிருக்க பவுல் இங்கு சொல்லவருவது என்ன? என்று காணுமுன், எடுத்துக்கொள்ளுதல் பற்றின உபதேசத்தை நிரூபிப்பதற்கு பயன்படுத்தப்படும் வேறொரு வசனப் பகுதியை வாசிப்போம்.

**லூக்கா 17:34-37** -ல் இங்கு ஏற்றுக்கொள்ளப்படுவது என்பது பொதுவாக மேல்நோக்கி எடுத்துக்



கொள்ளப் படுவதை குறிப்பதாகும். இவ்வசனம் எடுத்துக்கொள்வதைச் சொல்லவில்லை. மாறாக ஏற்றுக் கொள்ளப்படுவதை காட்டுகிறது - பதில்நம்ஆண்டவர் 37ம் வசனத்தில் சொல்கிறார் - இவை மேல் நோக்கி செல்வதைக் காட்டாமல், கீழ்நோக்கி வரும் கழுகைக் காட்டுகிறார். பிணம் எங்கேயோ என்று அரியமுறையில் விளக்கியுள்ளார். அதேபோல் கீழ்க்காணும் வசனமும் உள்ளது

**1கொரிந்தியர் 15:51,52**

***"... நாமெல்லோரும் நித்திரையடைவதில்லை... ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லோரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்."***

இது எடுத்துக்கொள்ளப்படுதலைப் பற்றியஉபதேசத்தை குறிப்பதாக புரிந்துகொள்ளப்படுகிறது. இரண்டாம் வருகையின்போது உயிரோடிருக்கும் உண்மைக் கிறிஸ்தவர்கள் மரணமடையாமல் ஒருகனப்பொழுதில் மறுரூபமாக்கப்படுவார்கள் என்று இதைப் புரிந்துகொள்கிறார்கள். இவையனைத்தும் கடைசி எக்காளத்தில் சம்பவிப்பதாக வசனம் போதிக்கிறது.

ஆனால் வேதத்தை ஆராய்ந்து படிக்கும் ஒருவரால் இவ்வசனங்கள் எழுதப்பட்டுள்ள சரியான பாஷையையும், அதன் கருப்பொருளையும் நன்கு புரிந்துகொள்ளமுடியும். இதையே

**2தீமோத்தேயு 2:15**

***"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு"***

இவைகளை அடையாள பாஷையில் புரிந்துகொள்ளவேண்டும். இப்பொழுது இவைகளுக்கான பொருளை அறிய முயற்சிக்கலாம்.

**1தெசலோனிக்கேயர் 4:16,17** வசனங்களில், இரண்டு பிரிவுகள் உள்ளதைக் காணலாம். வசனம் 17ல் "பின்பு" என்பது ஒரு காலப்பகுதியைக் காட்டும். ஆனால் எத்தனைக் காலம் என்பது தரப்படவில்லை. இங்கு கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது உயிர்த்தெழுவார்கள் என்றும், அவர்களைத் தொடர்ந்து நாமும் உயிர்த்தெழுவோம் என்றும் உள்ளது **(வெளிப்படுத்தல் 20:6).**

இங்கு"நாம்" என்பது யாரைக் குறிக்கும்? இங்கு பவுல் அப்போஸ்தலன் யார்? இதற்கான பதில் பின்வரும் வசனத்தில் உள்ளது-

**1கொரிந்தியர் 12:12**

***"எப்படியெனில்,சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள்அநேகம். ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்"***

இவர்கள்ஒரே சரீரமாக இருக்கும் கிறிஸ்து இயேசுவின் சரீரமான சபையைக் குறிக்கிறார்கள் என்று அறியலாம். ஆக சரீரமான சபையில் அநேகர் இன்னும் மரிக்காத நிலையைக் குறிக்கிறது. அதாவது

1. கிறிஸ்துவின் சரீரமான சபை நிறைவடைவது ஒரு இமைப்பொழுதில்
நிறைவேறுவதல்ல. மாறாக அது ஒரு காலப்பகுதியை உள்ளடக்கிய திட்டமாகும்

2. மேலும் நம் கர்த்தரின் இரண்டாம் வருகையின்போது கிறிஸ்துவின் சரீரமாகிய 1,44,000அங்கத்தினர்கள் அனைவரில், ஒரு பாகம் மட்டுமே உயிர்த்தெழுவார்கள். இதைக் குறித்தே - கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களில் முதலாவது உயிரடைவார்கள்**(1தெசலோனிக்கேயர் 4:16,17)** என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் எத்தனைபேர் உயிரடைவார்கள் என வேதத்தில் தெளிவாக சொல்லப்படவில்லை. உதாரணமாக எடுத்துக்கொண்டோமானால், ஒருவேளை கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் உயிர்த்தெழுதலுக்கான சமயம் வாய்க்கும்பொழுது உயிர்த்தெழுபவர்களின் எண்ணிக்கை 80,000 ஆக இருந்தால், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப்பின்பு மீதமிருப்பவர்களின் எண்ணிக்கை 64,000பேர்கள் (1,44,000- 80,000) இருப்பார்கள். இவர்களையே "பின்பு உயிரோடிருக்கும் நாமும்" வகுப்பாராவார்கள்.

இப்போது அடையாள பாஷையின் அர்த்தத்தைக் காணலாம் -

1. மேகங்கள்மேல் அவர்களோடேகூட : மேகங்கள் என்பது அடையாளம் ஆகும். இது உபத்திரவக் காலத்தைக் காட்டுகிறது.

**செப்பனியா 1:15**

***"அந்த நாள் உக்கிரத்தின் நாள், அது இக்கட்டும் இடுக்கமான நாள், அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்,அது இருளும் அந்தகாரமுமான நாள், அது மப்பும் மந்தாரமுமான நாள்"***

இது கிறிஸ்துவின் இராஜ்ஜியம் உபத்திரவக்காலத்தில் ஆரம்பமாவதைக் காட்டுகிறது

**தானியேல் 12:1**

***"உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாயேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும்"***

இந்தக் காலத்தைக் குறித்து நம் கர்த்தர் பின்வரும் வார்த்தைகளைப் பேசுகிறார் -

**மத்தேயு 24:21**

***"ஏனெனில் , உலகம் உண்டானதுமுதல்இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்"***

ஆம். இதுவே மகா உபத்திரவக் காலம். இந்தக் காலத்தில் இருளுக்கும் வெளிச்சத்திற்கும், சத்தியத்திற்கும் அசத்தியத்திற்குமான போராட்டமாகும். இந்த இராஜ்யஆளுகையின் துவக்க நாட்களில் , கிறிஸ்துவின் சரீர அங்கங்களின்முதலாம் உயிர்த்தெழுதல் சம்பவிக்கிறது.

2. ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு - ஆகாயம் என்ற வார்த்தை கண்ணுக்குத் தெரியாத ஆவிக்குரிய ஆளுகையை குறிப்பதாகும்.

**எபேசியர்2:2**

***"..கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய.."***

இது இவ்வுலகை சாத்தான் ஆண்டுகொண்டிருக்கிறான் . இந்த ஆளுகையை இயேசு தம்முடைய 2ம் வருகையில், கண்ணுக்குத்தெரியாத ஆவிக்குரிய அரசாட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றி, சாத்தானை கட்டுவார் என்றும், அதன்பின்பு 1000 வருடம் ஆட்சி செய்வார் என்றும் பார்க்கிறோம். மத்தேயு 12:29 "அன்றியும் பலவானை முந்திக் கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டிற்குள் புகுந்து அவன் உடைமைகளைஎப்படி கொள்ளையிடக்கூடும்?

**வெளிப்படுத்தல் 20:2**

***"பிசாசென்றும் சாத்தானென்றும்சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து அதை ஆயிர வருஷம் அளவும் அரசாளுவான்"***

மேலும் **வெளிப்படுத்தல் 2:10** ல்

***"நீ மரணபரியந்தம் உண்மையாயிரு . ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்"***

இதிலிருந்து நமக்கு என்ன தெளிவாகிறது என்றால், எல்லோரும் நிச்சயம் சோதிக்கப்படவேண்டும் என்றும், அந்த சோதனையில் மரணபரியந்தம் உண்மையாக நிலைத்திருந்தால் ஜீவ கிரீடம் நிச்சயம் என்றும் அறிகிறோம். ஆக இவ்வுலகில் தங்கள் ஓட்டத்தைத் தொடர்ந்து ஓடாவிட்டால் உயிர்த்தெழுதலில் மாற்றத்தைக் காணமுடியாது என்றும் அறிகிறோம்.

**1கொரிந்தியர் 15:50**

***"மாம்சமும் இரத்தமும் தேவனுடையராஜ்யத்தை சுதந்தரிக்கமாட்டாது"***

ஆகவே நாம் மேற்கொண்ட ஆராய்ச்சியில், "எடுத்துக்கொள்ளப்படுதல்"(Rapture) என்பது மாம்சத்தில் உயிரோடு இருக்கும்பொழுது நடக்காது என்பது தெளிவாகிறது. அடுத்து

**லூக்கா 17:34**

***"அந்த இராத்திரியில் ஒரு படுக்கையில் படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான் மற்றவன் கைவிடப்படுவான்"***

நாம் இவ்வசனங்களில் காண்கிறபடி, எடுத்துக்கொள்ளப்படுதலைக் குறிக்காமல் ஏற்றுக்கொள்ளப்படுவதையே குறிக்கிறது. எடுத்துக்கொள்ளப்படுவதாக சொல்லப்படுகிற இவ்வார்த்தையானது கிரேக்க மொழியில் பாராலேம்பனோ(Paralambano) என்று உச்சரிக்கப்படுகிறது. இதன் தமிழாக்கம் பெற்றுக்கொள்ளுதல் (அ) ஏற்றுக்கொள்ளுதல் ஆகும். மாறாக இதை நாம் மேல்நோக்கி செல்லுவதாகவோ (அ) வானத்தின்மேல் ஏறுவதாகவோ அர்த்தம் கொள்ளுதல் கூடாது.

அப்படியென்றால் ஏற்றுக்கொள்ளப்படுவான் என்பதன் பொருள் என்ன?
இந்த வார்த்தையும் அடையாள மொழியில் உள்ளதால் இதைப் பகுத்தறிவது அவசியம். வசனம் 34ல் நாம் பார்க்கும்போது - "அந்த இராத்திரியில் ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான். மற்றவன் கைவிடப்படுவான்" எனும்பொழுது,
இங்கு படுக்கை என்பது

**எபிரேயர் 4:3**

***"விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்"***

இளைப்பாறுதலைக் குறிப்பதாகும். இந்த இளைப்பாறுதல் விசுவாசத்தின்மூலம் கிடைப்பதாகும்.

இன்று பலவிதமான நம்பிக்கை காணப்படுகிறது. அநேக விதமான படுக்கை காணப்படுகிறது. இன்றைய கிறிஸ்தவப் பிரிவுகளில் பலவிதமான நம்பிக்கை, பலவிதமான பிரிவுகள் , பலவிதமான உபதேசங்கள் இந்த அநேக நம்பிக்கையின் அடையாளம் தான் படுக்கை எனப்படுகிறது.

எ.கா - ரோமன் கத்தோலிக்க, பெந்தேகொஸ்தே, சி.எஸ்.ஐ, செவன்த் டே, மற்றும் மெத்தடிஸ்ட் போன்ற நூற்றுக்கணக்கான பிரிவுகள் இவர்களில் சிலரை மட்டும் தேவன் ஏற்றுக்கொண்டு, மற்றவர்கள் கைவிடப்படுவார்கள் என்றும் நாம் காண்கிறோம்.

**_ஏசாயா 28:20_**

*"கால் நீட்ட படுக்கையின் நீளம் போதாது.*
*மூடிக்கொள்ள போர்வையின் அகலம் போதாது"*

இது எதைக் காட்டுகிறது? சத்தியத்தைத் தேடுபவர்களும்,சத்திய அறிவை அடைந்தவர்களும், பழைய படுக்கையிலும், அல்லது சௌகரியமாக செயல்படமுடியாமல் இருப்பதே. மற்றும் அநேக சந்தேக கேள்விகளுக்கு அவர்களுக்கு பதில் கிடைப்பதில்லை. அதைத்தான் "மூடிக்கொள்ள போர்வையின் அகலம் போதாது" என்று கூறப்பட்டுள்ளது. இப்பொழுது அடுத்த வசனத்திற்கான பொருளைக் காண்போம் -

**_லூக்கா 17:35_**

*"திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள்,*
*மற்றவள் கைவிடப்படுவாள்"*

என்பதே. ஆனால் இவ்வசனத்தில் "ஸ்திரீகள்" என்ற வார்த்தை மூலப்பிரதிகளில் இல்லை. இங்கே திரித்தல் என்றால் என்ன? திரிகை திரித்தல் (அ) அரைத்தல் என்பதன்அர்த்தம் என்னவென்றால், உணவு பண்டத்தை தயார் செய்தல் ஆகும்.இங்கு நாம் பார்க்கும் உணவு ஆவிக்குரிய உணவு ஆகும்(**எரேமியா 15:16**)

இங்கு திரித்தல் (அரைத்தல்) உணவு தயாரிப்பது யார்? சபையின் போதகர்களும், பிரசங்கம் செய்பவர்களும் திரிப்பவர்கள் ஆகும். இவர்களிலும் சிலர் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் சிலர் கைவிடப்படுவார்கள்.

**_லூக்கா 17:36_**

*"வயலில்இருக்கிறஇரண்டுபேரில்ஒருவன்ஏற்றுக்கொள்ளப்படுவான்,மற்றவன்கைவிடப்படுவான்"*

இங்கும் ஆண்களைக்குறிப்பது போன்று பயன்படுத்தப்பட்டுள்ள"ஒருவன்.. மற்றவன்" என்ற வார்த்தை மூலப் பிரதிகளில் காணப்படுவதில்லை. இதன் அர்த்தம் என்ன?

***மத்தேயு 13:38*** *"நிலம் - உலகம்"*

இங்கு உலக மனுஷ ஜாதிகளிலும் தேவன் தேர்வு செய்கிறார். கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாது, எல்லா ஜனங்களிலும் இருந்தும் கிறிஸ்துவின் சபையாகும்படி தேர்வு செய்யப்படுகிறார்கள். எ.கா - இந்து, முஸ்லிம், புத்த மதத்தவர், சீக்கியர்கள், ஜெயின் மதத்தவர்களும்கூட, இது சுவிசேஷ கால அறுவடையில் நடைபெறும் கடைசி அறுவடையைக் குறிக்கும். இவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற அழைக்கப்படுகிறார்கள் -

**வெளிப்படுத்தல் 5:9**

***"சகல கோத்திரத்திலும் , பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிக்காரர்களிலும் இருந்து"***

நடைபெறும் அறுவடையை இம்மூன்று வசனப் பகுதிகளும் அடையாளப்படுத்துகின்றன.
ஆகவே லூக்கா17:37ல், எங்கே அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்றதற்கு அவர்,

***"பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் கூடும் என்றார்"***

**கழுகுகள்** - ஞானம், கூரிய பார்வைக்கு அடையாளமாக உள்ளது. இப்படிப்பட்ட ஞானமுள்ள தேவனுடைய பிள்ளைகளுக்கு முன்னடையாளம்

**யோபு 39:28,29**

***"அது கன்மலையிலும், கன்மலையின் சிகரத்திலும்,அரணான ஸ்தலத்திலும் தங்கி வாசம்பண்ணும். அங்கேயிருந்து இரையை நோக்கும்.அதின் கண்கள் தூரத்திலிருந்து அதைப்பார்க்கும்"***

இது சபையைக் குறித்து சொல்லப்பட்ட வசனம் ஆகும். கன்மலையின் சிகரம் - கிறிஸ்துவையும்(**1கொரிந்தியர் 10:4**), "கண்கள் தூரத்திலிருந்து அதை பார்க்கும்" என்பது .. அவர்களுடையஆவிக்குரிய தொலைநோக்குப் பார்வையையும் குறிக்கிறது.


**ஏசாயா 33:17**

***"உன்கண்கள் ராஜாவை மகிமைபொருந்தினவராகக் காணும். தூரத்திலுள்ள தேசத்தையும் பார்க்கும்"***

**பிணம்** - இவை கழுகின்உணவு, அதுவும் புதிதாகக் கொள்ளப்பட்ட இரத்தத்தோடு உள்ள உணவைக்காட்டுகிறது(**யோபு39:30**). இவை புதிய ஜீவனைக் கொடுக்கக்கூடியதாகும். இரத்தம் என்பது ஜீவனைக் குறிக்கிறது(**லேவி 17:11**).
அப்படியானால் ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய உணவாகத் தேடுகிற "ஜீவன்" என்பது -

**யோவான்6:63**

***" நான் உங்களுக்குச்சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது"***



ஆம் தேவனுடைய வார்த்தைகள்ஜீவனும் சத்தியமுமாக இருக்கிறது. - கழுகு இரத்தத்தோடு உள்ள உணவைத் தேடுவதுபோல, இந்த உணவை ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் புது ஜீவனை அடைய ஆர்வத்தோடேதேடுவார்கள்(**எரேமியா 15:20**)

ஆகையால் இங்கும் மாம்சத்தில் எடுத்துக்கொள்ளுதலைக் குறித்து வசனம் போதிப்பதில்லை என்பதைக் காண்கிறோம்.

இப்பொழுது மூன்றாவது வசனப் பகுதியைக் காண்போம்

**1கொரிந்தியர் 15:51,52**

***"இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும்***

***நித்திரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் போது , ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும். அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்"***



நாம் ஒரு நிமிஷத்தில் ஒரு இமைப்பொழுதில் சரீரத்திலிருந்து அற்புதமான முறையில் மறுரூபமாக்கப்படுவோம். இது உண்மைதானா? எப்படி? தேவனுடைய சத்தியத்தில் பார்ப்போம்.

இது நேரடிப் பாஷையில் எழுதப்படவில்லை என்பதை "கடைசி எக்காளம்" தொனிக்கும்போது சம்பவிக்கும் என்று எழுதியிருப்பதன்மூலம் உணரலாம். ஏனெனில் முந்தைய எக்காளங்கள் தொனித்த சத்தத்தை, சொல்லர்த்தமாக நிறைவேறினதை யாரும் கேட்கவில்லையே

ஆகவே அநேக எக்காள தொனிகளுக்குப் பிறகு ஒலித்த கடைசி எக்காளத்தை இது அடையாளப்படுத்துகிறது என்பதை இதன்மூலம் அடையாளப்படுத்துகிறது.

அப்படியென்றால் இதன் உண்மையான அர்த்தம் என்னவென்று காண்போம்-

நாம் எல்லோரும் நித்திரையடைவதில்லை - "நாம்" என்பது கிறிஸ்துவின் ஒரே சரீரமாகிய சபை வகுப்பாரைக் குறிக்கிறது.

இங்கு நித்திரை என்பது மரண நிலையை அடையாளமாகக் காட்டுகிறது. அதாவது மரணம் அடைந்தவர்கள் ஒரு நினைவாற்றலும் இல்லாதவர்களாக, குறிப்பிட்டகாலஅளவு மட்டும் நிலைத்திருப்பதைக் குறிக்கிறதாக வாசிக்கிறோம் -

**யோபு 14:12**

***"மனுஷன் படுத்துக்கிடக்கிறான். வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எழுந்திருக்கிறதும் இல்லை, நித்திரை தெளிந்து விழிக்கிறதும் இல்லை"***

நித்திரை என்பது மரண நிலையை அடையாளப்படுத்துகிறது.

**யோவான் 11:11-14**

***"இவைகளை அவர் சொல்லியபின்பு அவர்களை நோக்கி, நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்றார். அதற்கு அவருடைய சீஷர்கள், ஆண்டவரே , நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள். இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக் குறித்து அப்படிச்சொன்னார். அவர்களோ நித்திரை செய்து இளைப்பாறுகிறதைக் குறித்துச் சொன்னாரென்று நினைத்தார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி, லாசரு மரித்துப்போனான் என்று வெளிப்படையாய்ச் சொல்லி.."***

ஆகவே பவுல் அப்போஸ்தலனின் வார்த்தைகளோடு நித்திரை குறித்த இந்த விளக்கத்தை ஒப்பிடும்போது, கிறிஸ்துவின் சரீர அங்கங்களில் சிலர்ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் மரிக்கும் நிலைக்குச் செல்வதில்லை என்று அறிகிறோம்.

நாம் எல்லோரும் மறுரூபமாக்கப்படுவோம் - கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் அனைவரும் முதலாம் உயிர்த்தெழுதலின்போது, சுபாவ மாற்றத்தை அடைவார்கள் என்ற உண்மையைக் குறிக்கிறது. மாம்ச சரீரத்தில் வளர்ச்சியடைந்து பூரணப்பட்ட புதிய சிருஷ்டியின் சிந்தை, திவ்ய சுபாவத்திற்கான ஆவிக்குரிய சரீரத்தை பெற்றுக்கொள்ளும். இந்த மாற்றத்தையே மறுரூபமாகுதல் என்கிறோம்

இது எப்போது நடக்கும்?

கடைசி எக்காளம் தொனிக்கும் : - இவை இயேசுவின் 2ம் வருகையைக் குறிக்கிறது.

**1தெசலோனிக்கேயர் 4:16**

***"அப்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடு இருக்கும் நாமும் மறுரூபமாக்கப்படுவோம்"***

இது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை வகுப்பாரின் உயிர்த்தெழுதலைப் பற்றின இரகசியத்தைக் காட்டுகிறது. இயேசுவின் பிரசன்னக் காலத்தில் முதலாம் உயிர்த்தெழுதல் அடையும் "நாம்" வகுப்பார், இந்த மறுரூபமாக்குதலை அடைவார்கள். இந்த சம்பவங்கள் சில காலம் நடக்கும்.

முந்தி பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு மரித்த கிறிஸ்துவின் சரீரமான சபையார், இயேசுவின் 2ம் வருகை வரை நித்திரையில்(மரணத்தில்) காத்திருந்ததுபோல் இவர்கள் காத்திருக்கத் தேவையில்லை. மரித்தவுடன் மறுரூபம் ஆக்கப்படுவார்கள். இதைத்தான்,

**1கொரிந்தியர் 15:53**

***"அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்"***

இந்த விநோதமான வகுப்பாரை யோவானுக்கு ஒப்பிட்டுக்கூறுகிறார் -

**யோவான் 21:22**

***"அதற்கு இயேசு, நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார்"***

இவர்கள் யோவான் வகுப்பார் என்றும் அழைக்கப்படுகிறார்கள். கர்த்தரின் இரண்டாம் வருகைக்கு பின்பும் மாம்சத்தில் உயிரோடிருக்கிறவர்கள்.

ஆகவே மேற்கண்ட ஆராய்ச்சியில், "மாம்சத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்(Rapture)" குறித்து வேதம் போதிப்பதில்லை என்று காண்கிறோம். இதன்மூலம், இரண்டாம் வருகையின்போது, "எடுத்துக்கொள்ளப்படுதல்" சம்பவிக்கும் என்று எதிர்பார்ப்பது வேத போதனைக்கு எதிரானது என்று காண்கிறோம்.

இப்பொழுது இரண்டாம் வருகை குறித்து கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் மற்றொரு பிரபலமான எதிர்பார்ப்பை குறித்து நாம் காணலாம்.

## இன்றைய கிறிஸ்தவர்களுக்குள் பிரபலமாகியிருக்கும் கருத்துக்கள்

### *இயேசு மாம்சத்தில், கண்ணுக்குப் புலப்படும்படி வருவார்?*

அநேகர் இயேசுவின் இரண்டாம் பிரசன்னம் கண்ணுக்குப்புலப்படும் வகையில் பூமியின்மீது சம்பவிக்கும் என்றும், சிலுவையில் அறையப்பட்ட அவருடைய மாம்ச சரீரத்திலேயே அவரை பார்க்கக்கூடும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.இதற்கு சில ஆதார வசனங்களைக் கொண்டுள்ளனர். அவற்றைக்காணலாம் -

**வெளிப்படுத்தல் 1:7**


***"இதோ மேகங்களுடன் வருகிறார், கண்கள் யாவும் அவரைக் காணும்"***

**மேலும் யோவான்20:19,20**

***"சீஷர்கள் கூடியிருந்த இடத்தில் இயேசு வந்து நடுவே நின்று உங்களுக்குச் சமாதானம் என்று சொல்லி, தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார்.***

**மேலும் வசனங்கள் 26,27**

***"தோமா அவர்களுடனேகூட இருந்தான்... அப்போது இயேசு வந்து நடுவே நின்று... தோமாவை நோக்கி, நீ உன் விரலை நீட்டி, என் கைகளைப்பார், உன் கையை நீட்டி என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்"***




இது நம் ஆண்டவர் உயிர்த்தெழுந்தபிறகு நடந்த சம்பவமாகும்.ஆகையால் பொதுவாக கிறிஸ்தவ ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், இயேசு தம் 2ம் வருகையில் வரும்போது, மாம்ச சரீரத்தில் வருவார் என்று நம்புகிறார்கள். இன்னும் முக்கியமாக, அவர் மேகங்களுடனே வருகிறார் என்பதால், மேகக்கூட்டங்கள் அதிகமாக இருக்கும்போது தான் அவர் வருவார் என்றும் சொல்கிறார்கள். இது உண்மையா? இந்த எதிர்பார்ப்பு வேத வசனத்தின்படிஉள்ளதா?என்பதை இப்போது காணலாம்.

இக்கேள்விக்கான பதிலை ஆராய்வதற்கு நம் கர்த்தர் உயிர்த்தெழுப்பப்பட்ட நிலையை வசனத்தில் வாசிப்போம் -

**யோவான் 6:51**

***"நான் கொடுக்கும் அப்பம், உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே"***

இதன் அர்த்தம் என்ன? இயேசு மனுக்குலத்திற்காக தம்முடைய மாம்சீக ஜீவனைக் கொடுத்ததை சுட்டிக்காட்டுகிறது. அதாவது சம மதிப்பான மீட்கும் பொருள்- ஜீவனுக்காக ஜீவன்.ஆதாமை (மனிதனை) மரணத்திலிருந்து மீட்க விலைக்கிரயமாக கொடுக்கப்பட்டது. ஆதாமின் சந்ததியான முழு மனுக்குலத்தையும் மீட்கும்படி - **மாற்கு 10:45, 1கொரிந்தியர் 15:22.**



இயேசுவின் சரீரம்அதாவது அவருடைய மனித உரிமைகள் எல்லாவற்றையும் என்றென்றைக்கும் கொடுத்தார். பலியாக தந்துவிட்டார்

அவர் மூன்றாம் நாளில் ஒரு மனிதனாக அல்ல, மாறாக மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தது, வல்லமையான ஆவிக்குரிய சரீரத்தில்தான்.

பேதுரு இதற்கு சாட்சியாக கூறும் வசனத்தை வாசிப்போம் -

***1பேதுரு 3:18*** *"அவர் மாம்சத்தில் கொலையுண்டு, ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டார்"*

மேலும் பவுல்,

***1கொரிந்தியர் 15:45***

***"முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது. பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்"***



இவ்வசனங்கள் அனைத்தும் கர்த்தர் உயிர்த்தெழுந்தது, வல்லமையான ஆவிக்குரிய சரீரத்தில் என்று நமக்கு தெளிவாகக் காட்டுகிறது. இப்பொழுது வல்லமையுள்ள ஆவிக்குரிய ஜீவியாக இருப்பதை நாம் தெளிவாகக் காண்கிறோம்

பின்பு நம் ஆண்டவர் 11முறை தம் சீஷர்களுக்குத் தரிசனமானார். எவ்விதத்தில் என்று பாருங்கள்

***யோவான் 20:13-15***

***"அவர்கள் அவளைநோக்கி,ஸ்திரீயே , ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள், என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்றாள். இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள். ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள். இயேசு அவளைப் பார்த்து, ஸ்திரீயே ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி, ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால் , அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள்"***

மேலும் நாம் வாசிக்கையில்,

***யோவான் 21:10-12***

***"அவரை கர்த்தர் என்று சீஷர்கள் அறிந்தபடியினால் அவர்களில் ஒருவனும் நீர் யார் என்று கேட்கத் துணியவில்லை"***

***மேலும் வாசிக்கையில்,***

***லூக்கா 24:15-31***

***"இயேசு தாமே அவர்களுடனேகூட நடந்துபோனார். ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது"***

***"அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அவரை அறிந்தார்கள். உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்"***

மேற்கண்ட இரு வசனங்களில் இயேசு தரிசனமாயும் சீஷர்களால் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று வாசிக்கிறோம். ஏன் இப்படி நடந்தது? இதற்குக் காரணம் என்ன? ஏனென்றால்

நம் ஆண்டவர் வெவ்வேறு மாம்ச சரீரத்தில் தரிசனமானதுதான்.

ஏன் இவ்வாறு இப்படி நடந்தது? இது சாதாரண மனிதனால் செய்யமுடியாது. இப்படி ஆவியின் ரூபத்தில் உள்ளவர்களுக்கு தேவனால் தரப்படும் வல்லமையாகும்.

இது உயிர்த்தெழுந்த நமதாண்டவருக்கு கொடுக்கப்பட்டது. இதன்மூலம், கண்களால் காணக்கூடாத ஆவியின் சரீரத்தில் இருந்து மனித உருவில் நடமாட முடிந்தது.

எடுத்துக்காட்டு - **ஆதியாகமம் 18:18 ஆபிரகாமிற்கு தரிசனமான "மூன்று புருஷர்கள்"**

**ஆதியாகமம் 32:24-30 யாக்கோபோடு இரவு முழுவதும் போராடிய "அந்த மனுஷன்"**

**நியாயாதிபதிகள் 13:15-17 "சிம்சோனின் தகப்பனாகிய மனோவா முன்பாக மனிதனாக தோன்றிய தூதன்"** இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவைகளாகும்.

இப்படி மாம்சத்தில் மனிதனாக தோன்றினவர்களுக்கு மனிதனின் சுபாவ குணங்கள் கிடையாது என்பதை அறியவேண்டும்.ஆனாலும் மற்ற மனிதர்களைப்போல உணவு உட்கொள்ளவும், குடிக்கவும், பேசவும், நடக்கவும் செய்தனர்.

அப்படியே இயேசுவும் உயிர்த்தெழுந்த பிறகு ஆவியின் ரூபத்தில் தான் இருந்தார் என்பதை பின்வரும் வசனங்கள் நமக்கு உறுதி செய்கிறது.

***யோவான் 20:19,26***

*"வாரத்தின் முதல்நாளாகிய அன்றைய தினம் சாயங்கால வேளையிலே , சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டப்பட்டிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று உங்களுக்குச் சமாதானம் என்றார்"*

*வசனம் 26 -"கதவுகள் பூட்டப்பட்டிருந்தது, அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று, உங்களுக்குச் சமாதானம் என்றார்"*

இந்த இரு சம்பவங்களிலும் பூட்டியிருக்கும் வீட்டில் இயேசு வந்து நின்றார். கதவு பூட்டியிருக்கும்போது எந்த ஒரு மனிதனும் உள்ளே நுழைந்து வரமுடியாது. இவ்விடத்தில் இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தின உருவம், தாம் மாம்ச தேகத்தில் இருந்த அதே உருவத்தை பயன்படுத்தினார். இவை உயிர்த்தபின் பரலோகம் ஏறிப்போகும் முன் பூமியில் 40நாட்கள் இருந்தபோது நடந்தது.

அதற்குப் பின்பு அவர் ஒரே முறை காட்சியளித்த சம்பவத்தை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

***அப்போஸ்தலர் 9:3-9***

*"அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது சவுலே, சவுலே, நீ என்னை ஏன்துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக்கேட்டேன். அதற்குஅவன், ஆண்டவரே நீர் யார் என்றான். அதற்குக் கர்த்தர், நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே. அவன் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர் நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ,*

*நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்"*

***அவர் காட்சியளித்ததைக் குறித்து*** சவுலினுடைய வார்த்தைகளை நாம் வாசிக்கையில் -

***அப்போஸ்தலர் 26:13***

***"மத்தியான வேளையில் ராஜாவே, நான் வழியிலே சூரியனுடையபிரகாசத்திலும் அதிகமான ஒளி வானத்திலிருந்து என்னையும் என்னுடனேகூடப்பிரயாணம் பண்ணினவர்களையும் சுற்றிப்பிரகாசிக்கக் கண்டேன்"***

இவ்வசனங்கள் நமக்கு ஒரு காரியத்தைக் காட்டுகிறது. உயிர்த்த இயேசு பரலோகம் சென்றபோது தரிசனமானதினால் சவுல் கண்கள் போனது. சவுலினால் மூன்று நாட்கள் உணவு உட்கொள்ளமுடியவில்லை, தண்ணீர் குடிக்கமுடியவில்லை. ஆகவே நம்முடைய உயிர்த்த இயேசுவை நாம் நம்முடைய கண்களால் பார்த்தால், பார்க்க முடிந்தால் நடக்கும் விளைவுகளை, நம் ஆண்டவரே ஒரு வசனத்தில் கூறுகிறார் -

***யோவான் 14:19***

***"இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது. நீங்களோ என்னைக் காண்பீர்கள், நான் பிழைக்கிறபடியினால் நீங்கள் பிழைப்பீர்கள்"***

ஆம் உலகத்தில் உள்ள மனிதர்கள் இப்போதும் எப்போதும் காணமுடியாது. ஏனெனில் அவர் ஒருபோதும் மாம்சத்தில் இராமல், இப்பொழுது வல்லமையுள்ளஆவிக்குரிய ஜீவியாக திவ்விய சுபாவத்தில் இருக்கிறார்.

இவ்வாறு, பின்வரும் வசனம் சொல்லும் உள்நோக்கத்தை நாம் சரியாகபுரிந்துகொள்ளவேண்டும்.

***வெளிப்படுத்தல் 1: 7*** ***"கண்கள் யாவும் அவரைக் காணும்"***

இவ்வார்த்தையின் மூலபாஷையான கிரேக்க மொழியில், **"ஓரா(HORAO)"** என்றுள்ளது. இதன் அர்த்தம் "ஒரு காரியத்தை கேட்டோ அல்லது படித்தோ புரிந்து கொள்வது" ஆகும். இவற்றை **எபேசியர் 1:19**ல் மனக்கண்களால் பார்த்து உணர்தல் என்றுள்ளது. இந்தக் கண்களால் இன்றைய உண்மைக் கிறிஸ்தவர்கள் பிதாவாகிய தேவனையும், குமாரனாகிய இயேசுவையும் காண்கிறார்கள். அந்த கண்களைத்தான் இவ்வுலகின் தேவனானவன் குருடாக்கினான் என்று வாசிக்கிறோம் -

***2கொரிந்தியர் 4:4***

***"..இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்"***

இதன்மூலம் "கண்கள்யாவும் அவரைக் காணும்" என்றவார்த்தைகள் மனுக்குலத்தினர் அனைவரும் இவ்வுலக இரட்சகரான இயேசுவையும் அவரது பணிகளையும் புரிந்துகொள்வதைக் குறிப்பதாக நாம் காண்கிறோம்.

இதை பின்வரும் வசனத்திலும் நாம் உணரலாம் -

***ஏசாயா 40:5***

*"கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும், கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று"*

இப்பொழுது **வெளிப்படுத்தல் 1:7**ல் கூறியுள்ள மீதி பாகத்தை புரிந்துகொள்வோம் -

***"இதோ மேகங்களுடனே வருகிறார்"***

இது உபத்திரவக் காலத்தின் மத்தியில் கர்த்தருடைய 2ம் பிரசன்னமும்,இராஜ்யத்தின் ஆளுகையும்துவங்குவதை குறிக்கிறது.

தொடர்ந்து நாம் வாசிக்கையில், ***"அவரைக் குத்தினவர்களும் காண்பார்கள்"***
யார் என்றால் இஸ்ரயேல் ஜனங்கள் தான். இவர்களது மனக்கண்கள் திறக்கப்பட்டு, இயேசுவை தங்கள் சொந்தமேசியாவாக அடையாளங்கண்டு, அவரை மரணத்திற்கு உட்படுத்தியதற்காக துக்கிப்பார்கள்.

ஆகவே இயேசுவின் 2ம் வருகையை இஸ்ரயேல் ஜனங்களின் மனக்கண்கள் திறந்து அவரை அறிந்துகொள்வார்கள் என்று கீழ்க்கண்ட வசனங்களிலிருந்து அறியலாம்.

***ஏசாயா 29:18***

***"அக்காலத்திலே செவிடர் புஸ்தகத்தின்வசனங்களைக்கேட்பார்கள்.***
***குருடரின் கண்கள் இருளுக்கும் அந்தகாரத்துக்கும் நீங்கலாகிப் பார்வையடையும்"***

***ஏசாயா35:5***

***"அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள்திறவுண்டுபோம்"***

***ஏசாயா32:3***

***"அப்பொழுது காண்கிறவர்களின் கண்கள்மங்கலாயிராது.***
***கேட்கிறவர்களின் செவிகள் கவனித்தே இருக்கும்"***

இவை நிறைவேறும் சமயத்தில், பின்வரும் வசனத்தில் வாசிக்கிறகாரியமும் நிறைவேறும் -

***பிலிப்பியர் 2:10,11***

***"இயேசுவின் நாமத்தில் வானோர்பூதலத்தோர்பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்"***

முடிவாக, நம் கர்த்தரின் 2ம் வருகை குறித்த இன்றைய கிறிஸ்தவ போதகத்தின் எதிர்பார்ப்புக்கள் வேத வசனங்களில் காணப்படுவதில்லை, வேத வசனங்களில் எந்த ஆதாரமுமில்லை எனபது தெளிவாகிறது.
அப்படியென்றால், கர்த்தருடைய இரண்டாம் வருகை வேறு எவ்விதத்தில் சம்பவிக்கும்?

- இதற்கான பதில் இரண்டாம் வருகை குறித்த நம் ஆராய்ச்சியின் இரண்டாம் பாகத்தில் காண்போம்.

**தேவனுடைய கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக ஆமென்.**